புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# குமரி மாவட்ட நாவல்களில் ஐரோப்பிய மிஷனெரிகள் குறித்த பதிவு

ச.ஸ்டெபி
பதிவு எண் : 21113114022036
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் – 629165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி - 627012

முனைவர்.சா.மேகலின்சந்திரா,
நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி. -627012

ஆய்வுச் சுருக்கம் :

ஐரோப்பிய மிஷனெரிகளின் வருகையால் பலவிதமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை குமரி மாவட்ட நாவல்கள் வாயிலாக அறிய முடிகிறது. ஐரோப்பியர் வருகையினால் தமிழ் மொழி அதிகமாக வளர்ச்சி நிலையைக் கண்டுள்ளது. தமிழில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பாதிரிமார்களால் உண்டானவையாகக் குறிப்பிடப்படுகின்றன. கிறிஸ்தவம் தோன்றக் காரணமாக அமைந்தவர் தோமா என்று அவர் முன்னிலைப் படுத்தப்படுகிறார். சுவாட்சு ஐயர் முயற்சியால் மிஷன் தோன்றியது. எஸ்.பி கேசியின் பணி திருவிதாங்கூருக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. சார்லஸ் மீட் ஐயர், ரிங்கல் தௌபே இம்மண்ணில் கால் வைப்பதற்கு முன்னால் சீர்திருத்தக் கிறிஸ்தவம் இம்மண்ணில் வேரூன்றியுள்ளமைப் புலப்படுத்தப்படுகிறது. இந்தியாவின் பல பகுதிகளைப் போலவே குமரி மாவட்டத்தில் உள்ள திருவிதாங்கூரிலும் தற்காலக் கல்வியைச் சீர்திருத்த மிஷனெரிகளே ஆரம்பித்தனர். திருவிதாங்கூரில் ஆங்கிலேய பாடசாலையை ரிங்கல் தௌபே ஆரம்பித்தார். ஐரோப்பிய மிஷனெரிகளின் வருகையினால் கல்விக் கூடங்களில் மாறுதல்கள் ஏற்பட்டன. மிஷனெரிகள் சமயப் பணியின் முழுமையை மக்கள் அனுபவிக்க வேண்டுமெனில் மருத்துவப் பணியும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் கருத்தாய் செயல்பட்டனர். மக்களை மீட்டெடுத்து அறிவுப் புகட்டி அவர்களிடையே மருத்துவப் பணியையும் திறம்பட செய்த மிஷனெரிகளின் தொண்டு அழியாததாகும். நாம் வாழும் இந்திய நாடானது பலவகை கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டது. பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற சட்டம் அக்கால வழக்கில் காணப்பட்டது. கிறிஸ்தவ மிஷனெரிகளின் வருகையினால் மேலாடை அணியலாம் என்றச் சட்டம் விதிக்கப்பட்டது. கிறிஸ்தவ மிஷனெரிகளால் அடித்தட்டு மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் சமூகத்தில் வேகமான முன்னேற்றத்தினை நோக்கி பயணித்தனர். ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தில் முன்னேறி வருவதைக் கண்ட உயர் சாதி மக்கள் பொறாமைக் கொண்டு அவர்களுக்கு எதிராக பல்வேறு வன்முறைகளைத் தூண்ட முயன்றனர். கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட தாழ்குல மக்கள் முன்போல பயந்து போகாமல் அநீதிகளை எதிர்க்கத் தொடங்கினர். மிஷனெரிகளின் அறிவுரைகளால் முற்போக்குச் சிந்தனைப் பெற்ற இவர்கள் தங்களுக்குக் கிடைத்த உரிமைகளைத் தக்க வைத்துக் கொள்ளப் பாடுபட்டனர். படிப்பினாலும் சமய வழிபாட்டினாலும் ஒடுக்கப்பட்ட சமூகத்து மக்கள் தங்களுக்கு இணையாக முன்னுக்கு வருவதைப் பொறுக்காத உயர் இனத்தவர்கள் சூழலுக்கேற்ற தாக்குதல்களை அவர்களுக்குக் கொடுத்தனர். கிறிஸ்தவர்களுக்கு எதிரான நிலையில் காணப்பட்ட சட்டங்களை மாற்றி அமைத்து அனைத்து மக்களுக்கும் சமநீதி கிடைக்க வேண்டுமென்று மிஷனெரிகள் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இங்குள்ள அடிமைத் தனத்தை விளக்கி நாளிதழ்களில் விளம்பரப்படுத்தினர். அடிமைகளாக வாழ்ந்த மக்கள் நாகரீகம் அடைந்தனர். மிஷனெரிகள் கூட்டாகச் சமூகத்தை

*இழிவுபடுத்தும் அடிமை நிலையை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். மிஷனெரிகளின் தாக்கம் குமரி மாவட்ட நாவல்களின் வாயிலாக எவ்வாறு அமையப்பெற்றன என்பதை ஆராய்ந்து எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.*

*முன்னுரை :*

*குமரி மாவட்ட நாவல்களில் ஐரோப்பிய மிஷனெரிகள் குறித்த பதிவுகள் அதிகமாக காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களாகிய ஐரோப்பியரின் தொடர்பினால் தமிழ் மொழிக்கு உண்டான வளர்ச்சி இங்கு புலப்படுகிறது. வாணிகத்தின் நோக்கில் ஐரோப்பியர்கள் இந்தியரை கிறிஸ்தவ மதத்தில் சேர்த்தனர் என்ற செய்தி சுட்டிக்காட்டப்படுகிறது. சமூகத்தின் உயர்வான கல்வியை மிஷனெரிகள் தன்னலம் கருதாது அனைவருக்கும் கொடுத்தனர் என்பதும், மருத்துவப் பணிக்காகவும் சமூகப் பணிக்காகவும் மிஷனெரிகள் ஆற்றிய தொண்டு பற்றியச் செய்திகளும் மிகவும் ஆழ்ந்த நிலையில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலாடைப் போராட்டத்தில் பெண்கள் மேலாடை அணியவும் ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவ மக்கள் முன்னேறவும் மிஷினெரிகள் அயராது உழைத்தனர் என்பது இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. மிஷனெரிகளால் உருவான வளர்ச்சி நிலைகள் பலவற்றைக் குறித்தும் இவ்வளர்ச்சியினால் ஒடுக்கப்பட்ட மக்கள் எவ்வாறு முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதையும் குமரி மாவட்ட நாவல்களின் வாயிலாக இக்கட்டுரை ஆராய்கிறது.*

*ஐரோப்பியர் வருகையும் தமிழ் மொழியும்:*

*கிறிஸ்தவராகிய ஐரோப்பியரின் தொடர்பினால் தமிழ் மொழிக்கு உண்டான வளர்ச்சி இங்கு வெளிப்படுத்தப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மேல் நாட்டார் நமது இந்தியா தேசத்துடன் சிறப்பாகத் தென் இந்தியாவுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். ஐரோப்பியர்கள் வந்த பிறகு உரை நடையில் மாற்றம் ஏற்பட்ட நிலையினை,*

*“தொன்மை தானே*
*உரையொடு புணர்ந்த பழமொழி மேற்றே*
*(மயிலை சீனி வேங்கடசாமி – 2006)*

*என்று தொல்காப்பியச் செய்யுளில் 238 ஆவது சூத்திரத்தின் வாயிலாக அறியலாம்.” வாணிகத்துக்காக வந்த ஐரோப்பியர்கள் இந்தியரைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்க முயற்சி செய்த நிலையினை இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

*இந்துக்களைக் கிறிஸ்தவராக்கும் பொருட்டு அனேக பாதிரிமார்களை ஐரோப்பிய தேசங்களிலிருந்து அழைத்து வந்தார்கள். நமது தேசத்துக்கு வந்த பாதிரிமார்கள் கிறிஸ்தவ மதத்தைப் போதிக்க முற்பட்டபோது அவர்களுக்கு இந்நாட்டு மொழிகள் தடையாக இருந்தன. ஆகவே அவர்கள் இந்திய மொழிகளை கற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த முறையில் தமிழ்நாட்டிற்கு வந்த பாதிரிமார்கள் தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்து தமிழில் பேசவும், சொற்பொழிவு நிகழ்த்தவும், நூல் இயற்றவும் தொடங்கினார்கள். தமிழ் மொழிக்கு ஏற்பட்ட மாறுதல் அல்லது வளர்ச்சி பெரும்பாலும் பாதிரிமார்களால் உண்டானவை என்பது இதன் வாயிலாக அறிய முடிகின்றன.*

*கல்விப் பணியில் மிஷனெரிகளின் தாக்கம்:*

*இந்தியாவில் பல பகுதிகளைப் போல் திருவிதாங்கூரிலும் தற்கால கல்வியைச் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனெரிகளே ஆரம்பித்தனர். திருவிதாங்கூரில் ஆங்கிலேய பாடசாலையை ‘ரிங்கல் தௌபே’ என்பவர் ஆரம்பித்தார். இவர் 1806 ஆம் ஆண்டு கல்வியை பரப்பினார். “மறுபக்கம்” நாவலில் கல்வி முழுமையாக மறுக்கப்படுகிறது. கீழ் ஜாதி மக்கள் தனது குழந்தைகளை வசதியின்மை காரணமாகவும் மேல் ஜாதி வர்க்கத்தின் ஆதிக்க நிலையினாலும் கல்வி மறுக்கப்படுகிறது. சார்லஸ் மீட் ஐயரின் வருகையால் கல்விக்கூடங்களில் பல மாறுதல்களும் முன்னேற்றங்களும் ஏற்படுகின்றன.” (பொன்னீலன் 2010). பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருவிதாங்கூரில் திட்டமிட்டக் கல்வியைப் பரப்புவதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படவில்லை. சில தனியார்களால் வீட்டின் முன் வாசலிலும் அல்லது உயர்ந்த இடத்திலும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டன.*

*ரிங்கல் தௌபேயின் முழுமையான நோக்கம் ஆலயம் எழும்பும் இடங்களிலெல்லாம் கல்விக்கூடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். இவர் தாம் தொடங்கிய பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு ஆசிரியர்களையும் நியமித்தார் சார்லஸ் மீட் ஐயரின் பணியால் அதிகமான மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். "சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் என்ற நூலில் ஒருவர் தாம் பெறக்கூடிய செல்வங்களுள் எல்லாம் தலையாயது கல்விச் செல்வம். இதனை ஒருவர் பெறின் பிற அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக வந்தடையும் என்று அவர் கூறியுள்ளார். (க.அ.ஜோதி ராணி-2011) மகளிர் கல்வியிலும் மிஷனெரிகள் தனி ஆர்வம் காட்டியுள்ள செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது". புதிதாகக் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்கிற மக்களுக்குக் கல்வி கொடுக்கவும் புத்திக் கூறவும் தேவையான ஆசிரியர்களையும், உபதேசிகளையும் உருவாக்குவது அடிப்படைத் தேவை என்பதை சார்லஸ் மீட் உணர்ந்தார். சார்லஸ் மீட் ஐயரின் உதவியினால் பல மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர் என்பதை இதன் வழியாக அறிய முடிகிறது.*

*மருத்துவத்தில் மிஷனரிகளின் பங்கு:*

*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. தென் திருவிதாங்கூரில் பணியாற்றிய ஆரம்ப கால மிஷனெரிகள் இயேசுவின் நற்செய்தியை இம்மண்ணில் வேரூன்ற செய்ய பலவிதத் தொடர் முயற்சிகளை மேற்கொண்டனர். சமயப் பணியின் முழுமையை மக்கள் அனுபவிக்க வேண்டுமெனில் மருத்துவப் பணியும் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று கருத்தாய் செயல்பட்டனர். "தவறான தடங்கள் நாவலில் பல தீராத நோயினை உடையவர்கள் நோய் வருவதற்கு காரணம் தீய ஆவிகள் எனக் கருதினர். இத்தகைய கருத்துடைய மக்களை மீட்டெடுத்து அறிவி புகட்டி அவர்களுக்கிடையே மருத்துவப் பணியையும் திறம்படச் செய்த மிஷனெரிகளின் தொண்டு அழியாததாகும்". (ஐசக் அருமை ராஜன் - 1989) இந்த செய்தியினை இந்நாவல் மிகவும் ஆழமாக உணர்த்துகிறது.*

*மீட் ஐயர் மருத்துவத்தின் தேவையினை உணர்ந்து நெய்யூரில் மருத்துவமனை ஒன்றினைத் தொடங்க திட்டமிட்டார். அதற்கு தேவையான நிதியையும் மருத்துவர்களையும் லண்டன் அருட்பணி இயக்கம் மூலம் எப்படியேனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். இங்கிலாந்திலுள்ள பலர் எழுச்சி பெற்று திருவிதாங்கூரில் நடைபெறும் பணிகளுக்கு உதவ முன் வந்தனர்.*

*ரிங்கல் தௌபே என்ற மிஷினெரி ஏழைகளின் உடல் நலம் குறித்துக் கவலை கொண்டிருந்தார். பொதுவாகவே ஏழைகளுக்கு உணவளிப்பதும் நோயுற்றோருக்கு மருத்துவ உதவி செய்தும் அவரின் வழக்கமாக இருந்தது. இதுவே மிஷனெரிகளின் மருத்துவ சேவையின் தொடக்கமாகும். 1838 மார்ச் முதல் டாக்டர் ஆர்ஸ்பாலட் றாம்சே என்பவரால் திருவிதாங்கூரின் மருத்துவ மிஷன் நெய்யூரில் தோற்றம் பெற்றது. (ஐசக் அருள்தாஸ்-2010) மருத்துவமனைக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதிய பணவசதியில்லாததால் மீட் ஐயர் சில ஓலைப்புரைகளைக் கட்டுவித்தார். அதில் நோயாளிகள் வந்து அமர்ந்தும் தங்கியும் சிகிட்சை பெற்றுச் சென்றனர். பிறகு நெய்யூரில் மிஷினெரிகளின் உதவியோடு மருத்துவமனை நிறுவப்பட்டது. "புத்தம் வீடு" நாவலில் பனையில் ஏறும் ஆட்கள் கீழே விழுந்து நெய்யூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலை இங்கு புலனாகிறது." (ஹெப்சிபா ஜேசுதாசன்-1964) மிஷனெரிகளின் அர்ப்பணிப்பு மிகுந்த உள்ளத்தால் பல மக்கள் மருத்துவமனைக்குச் சென்று பயன்பட்டு வருகின்றனர் என்கிறச் செய்தி இதன் வாயிலாக வெளிப்படுகின்றது.*

*மேலாடைப் போராட்டத்தில் மிஷனெரிகளின் பங்கு:*

*நாம் வாழும் இந்திய நாடானது பலவகைக் கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் தன்னகத்தேக் கொண்டது. மேற்கும் கிழக்கும் ஒன்றோடொன்று முட்டி மோதி இந்நாட்டில் தங்கள் கருத்துப் பரிமாற்றங்களையும், கலாச்சாரங்களையும், பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்திக் கொண்டன. ஆங்கிலேயர்களின் ஆட்சியாலும், மேலைநாட்டு மிஷனெரிகளின் அருட்த் தொண்டாலும் சமூகத்தில் காணப்பட்ட ஒடுக்கு முறைகள் அகற்றப்பட்டு உரிமைகள் நிலைநாட்டப்பட்டன. திருவிதாங்கூரைப் பொறுத்தவரையில் பெண்கள் இரண்டாந்தர குடிமக்களாகவே கருதப்பட்டனர்.*

*"அன்றைக்கு வாழ்ந்திட்ட நம்மினத்து*

*அழகான பெண்கள்தம் மார்பதன் மேல்,*
*நன்றென்று ரவிக்கையப் போட்டுவிட்டால்*
*நாடாத்திப் பெண்ணுக்கு ரவிக்கையாமோ?*
*என்றுரைத் தேயதைக் கிழித்தெறிவார்!*
*எண்ணரும் தீமைகள் செய்திடுவார்!*
*இந்நிலை இம்மண்ணில் இன்று இல்லை!*
*இதைச் செய்த ஆண்டவர் யாருணர்வீர்?*
*(பக்தவல்சலம் 1981:2)*

*சம உரிமை எட்டாக் கனியாகவே இருந்த நிகழ்வு இதன் வாயிலாக வெளிப்படுகிறது.*

*சாதிப்பாகுபாடு, சமூகத்தின் இழிவு நிலையைத் தெளிவாக வெளிப்படுத்தியது. குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை. அவ்வினத்துப் பெண்கள் தங்கள் மார்பினை மறைக்கும் அளவில் உடை உடுத்தக் கூடாது என்பது சமூகக் கட்டுப்பாடாகவும், சாதியர் கட்டுப்பாடாகவும் இருந்தது. "அலைகளின் காலம்" நாவலில் மீட் பாதிரியார் அதிகாரிகளிடம் பேசும்போது மரிய பொன்னாயி மட்டுமல்ல பத்ரகாளி என்ற பெண்ணும் மேலாடை அணிந்திருந்ததால் நாயர்களால் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்கிறார்". (முகிலை இராச பாண்டியன் 2000) மேலாடை அணிவது சம்மந்தமாக கிறிஸ்தவ பெண்களுக்கு ஆதரவாக சார்லஸ் மீட் என்ற கிறிஸ்தவ மிஷனெரி பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் வழக்கு பதித்தார். கிறிஸ்தவ பெண்கள் மேலாடை அணியலாம் என்று 1821 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ராணி பார்வதி பாய் அறிக்கை ஒன்று வெளியிட்டார். தோள்ச்சீலை அணிவதற்குப் பதிலாக குப்பாயம் அணிந்து கொள்ளலாம். 1823 ஆம் ஆண்டு ஒரு அறிக்கை வெளியிட்டார். ரிங்கல் தௌபே என்னும் சமயப் பரப்பாளரின் பணியால் பலர் கிறிஸ்தவச் சமயத்தை புதிதாகத் தழுவினர். அத்தகைய புதிய கிறிஸ்தவர்கள் ஆலய வழிபாட்டிற்கு அரை நிர்வாணிகளாக வருகைத் தந்தனர். இதனைக் கண்ணுற்ற ரிங்கல் தௌபே அவர்கள் இக்கிறிஸ்தவ பெண்களின் மேல் இரக்கம் கொண்டு மேலை நாடுகளிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயத்த ஆடைகளை வருவித்து, ஆலயத்திற்கு வரும் பெண்களின் மார்புகளை மறைப்பதற்குக் கொடுத்தார். மேலாடை போராட்டத்தால் ஒடுக்கப்பட்ட நாடார் இன மக்கள் மிஷனெரிகளால் துணிச்சல் பெற்று வாழ்ந்தனர் என்ற செய்தி இங்கு குறிப்பிடப்படுகின்றன.*

*மிஷனெரிகளால் விடுதலைப் பெற்ற சமூகம்:*

*கிறிஸ்தவ மிஷனரிகளால் அடித்தட்டு மக்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் சமூகத்தில் வேகமாக முன்னேற்றத்தினை நோக்கி பயணித்தனர். மக்கள் மத்தியில் மிஷனெரிகள் ஆற்றிய சேவைக்குத் திருவிதாங்கூரில் ஆங்கில பிரதிநிதிகளாக செயல்பட்ட மெக்காலேயும், மன்றொவும், பெருமளவில் உதவி செய்தனர். திருவிதாங்கூரில் ஆங்கிலப் பாதிரிகளின் ஆதிக்கம் நுழைந்தது வேறுபாடான ஒரு செயலாகும்.*

*"அடிமை வேலை ஒழிந்த்தே-எம*
*தடிமை ஓலையும் கிழிந்த்தே"*
*(ஐசக் அருள்தாஸ் 2010)*

*என்று அந்நாட்களில் பாறச் சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த உல்லியம் பிளச்சர் ஐயர், பாடினார். ஒதுக்கப்பட்ட சமூகம் இப்பொழுது உயர் நிலைக்கு தகுதியாயினர் என்றே கூறலாம்.*

*ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை வாழ்வில் நுழையும் சூழல் கனிந்தது. சமூக வாழ்க்கையில் உரிமையைப் பெற விரும்பியமையுடன் தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையிலும் சில ஒழுக்கங்களைக் கடைபிடித்தனர். சமூகத்தை இழிவுபடுத்தும் அடிமை நிலையை விடுவிக்கும் முயற்சியில் மிஷனெரிகள் கூட்டாக ஈடுபட்டனர். இலஞ்சம், நேர்மையின்மை, அதிகார துர்ப்பிரயோகம் போன்ற சமூக சீர்கோடுகளை அடியோடு மாற்றி மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மக்கள் குறைகளை முறையிட நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. "மீட் ஐயர் ஏழை மக்களுக்கு நியாயம், நீதி கிடைக்க வேண்டி நீதிமன்றத்தில் வாதாடி நீதி கிடைக்கச் செய்தார்". (பிறப்பு-வாழ்க்கை-இறப்பு 2017). முற்போக்கான பல நடவடிக்கைகளால் நாட்டில் நிர்வாகம் சீரழிந்ததுடன் ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தில் முன்னேற்றம் பெற்றனர் என்ற நிலை இங்கு காண முடிகிறது.*

தொகுப்புரை:

குமரிமாவட்ட நாவல்கள் வாயிலாக ஐரோப்பிய மிஷனெரிகள் தமிழுக்கு எத்தன்மை உடைய வளர்ச்சி நிலைகளைத் தந்துள்ளனர் என்றச் செய்தி இங்கு காணமுடிகிறது. மக்களின் தேவைகளை உணர்ந்து மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், கீழ்ஜாதி வர்க்கத்தினரும் கல்வி கற்கும் நிலை உருவானது. பெண்கள் மேலாடை அணியலாம் என்ற சட்டம் விதிக்கப்பட்டதுடன், மிஷனெரிகளின் அரிய முயற்சியால் ஏழைகளுக்காக நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. மிஷனெரிகளின் தாக்கத்தால் ஒடுக்கப்பட்ட சமூகம் விடுதலைப் பெற்ற சமூகமாக மாறியது. இத்தகைய கிறிஸ்தவச் சீர்த்திருத்தச் சிந்தனைகளைக் கொண்ட மிஷனெரிகள் அரியமுயற்சியில் ஈடுபட்டு அடிமைச் சமூகத்தை ஆதிக்கச் சமூகமாக மாற்றி உள்ளனர் என்பது இக்கட்டுரையின் வாயிலாகப் புலனாகிறது.

துணை நூற்பட்டியல்:


1. ஐசக் அருமை ராஜன் — தவறான தடங்கள், முதல் பதிப்பு – 1989. கிறிஸ்தவ சங்க இலக்கியம், மதுரை - 600003
2. ஐசக் அருள்தாஸ் — குமரி மண்ணில் கிறிஸ்தவம், முதல் பதிப்பு - ஜூன் 2010 நாகர்கோவில் - 629001
3. பொன்னீலன் — மறுபக்கம், முதல் பதிப்பு ஏப்ரல் 2010 நான்காம் பதிப்பு - செப்டம்பர் 2012, ஐந்தாம் பதிப்பு - ஏப்ரல் 2019 அம்பத்தூர், சென்னை - 600098
4. மயிலை.சீனி.வேங்கடசாமி — கிறிஸ்தவமும் தமிழும், முதல் பதிப்பு - அக்டோபர் 2006 ஐந்தாம் பதிப்பு மார்ச் 2012, நாம் தமிழர் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை -5
5. முகிலை இராசபாண்டியன் — அலைகளின் காலம், முதல் பதிப்பு டிசம்பர் 201, இரண்டாம் பதிப்பு - ஜூலை 2014, மூன்றாம் பதிப்பு - ஜூலை 2015, புழுதிவாக்கம், சென்னை 600091
6. சி.வின்சென்ட் — பிறப்பு-வாழ்க்கை-இறப்பு, முதல் பதிப்பு 2017, அச்சிட்டோர் –சி.எஸ்.ஈ.பேராய அச்சகம், நாகர்கோவில்
7. க அ ஜோதிராணி — சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள், முதல் பதிப்பு 2011, உலக தமிழாராய்ச்சி நிறுவனம்
8. ஹெப்சிபா ஜேசுதாசன் — புத்தம்வீடு, முதல் பதிப்பு - ஜூன் 1964, எட்டாம் பதிப்பு - ஆகஸ்ட் 2014 நாகர்கோவில் - 629001


********* ********* ********** ********* ********* ********** ********** **********